பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத ஸு ஆவணி மீ 19 உ செவ்வாய்க்கிழமை (04-09-1990) ஹிஜ்ரீ 1410 ஸபர் பிறை 14 கதிர் 185

# முல்லையில் நேற்று முழுவதும் அகோர விமானத் தாக்குதல்!

## நகரக் கட்டடங்கள் தரைமட்டம்; படைகள் இறங்கின என்கிறது அரசு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 4

முல்லைத்திவு நகரப் பகுதியில் நேற்று முழுவதும் இலங்கை விமானப் படையினர் இடைவிடாது நடத்திய விமானத் தாக்குதலினால் நகரப்பகுதியில் இருந்த வீடுகள், கடைகள், ஆஸ்பத்திரிகள் உட்பட பல கட்டடங்கள் தரைமட்டமாகின. முல்லைத்திவு நகரம் பெரும் அழிவுக்குள்ளானது.

இதேசமயம் முல்லைத்திவு முகாமிற்குள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் நேற்று துருப்புகள் தரையிறக்கப்பட்டதாக இலங்கை அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் அதனை ஊர்ஜிதப்படுத்தக் கூடிய சுயாதீன தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

எனினும் ஆறு நாள் கடும் சண்டையின் பின்னர் முல்லைத்திவுப் பட்டினத்தை இலங்கை அரசுப் படையினர் கைப்பற்றிவிட்டதாக கூறப்படுவதாக இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது.

நேற்று முல்லைத்திவுமுகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய றொக்கட் தாக்குதல் ஒன்றில் ஆறு படையினர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னையர் முன்னணி நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 4

தமிழ் மக்கள் மீதான உணவுத் தடை, மருந்துத் தடை ஆகியவற்றைக் கண்டித்து யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்றுக் காலை 10 மணி அளவில் யாழ். முத்திரைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகியது.

ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான பெண்களும், ஆண்களும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ லங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை எதிர்த்து சுலோக அட்டைகள் கொண்டுசெல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உணவு லொறிகளை புலிகள் திருப்பி அனுப்பியதாக கூறுவது தவறு

### செஞ்சிலுவைக்குழு விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 4

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொடியுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கிளிநொச்சி நோக்கி வந்த லொறிகள் மாங்குளத்துக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகளினால் திருப்பி அனுப்பப்பட்டதாக ராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகளில் வெளியான செய்தி தவறானது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுநேற்றுவிடுத்தசெய்திக் குறிப்பு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொடியுடன் (கொழும்பிலிருந்து) கிளிநொச்சி நோக்கிச் சென்ற ஏழு லொறிகள் கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி மாங்குளத்தை அண்டிய பகுதிகளைச் சென்றடைந்தன.

அந்த நேரத்தில் அந்தப் பிரதேசத்தில் சண்டை நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து 17 கட்சிகள் பிரேமாவுடன் பேச்சு

### உணவு, எரிபொருள் அனுப்பக் கோரிக்கை

கொழும்பு, செப். 4

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான 17 கட்சிகளின் தூதுக்குழு ஒன்று நேற்றுக் காலை ஜனாதிபதி பிரேமதாஸாவை, அவரது செயலகத்தில் சந்தித்து வடக்கு - கிழக்கு நிலைமை பற்றிபேச்சுக்கள் நடத்தியது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை போதுமான அளவு அனுப்பிவைக்கவேண்டும் என்றும்—

குறிப்பாக யாழ். மாவட்டத்திற்கு உணவுப் பொருள்களைத் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி செய்வதுடன், இராணுவ நடவடிக்கைகளை [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவிலில்

## ஹெலி நேற்று நடத்திய பரவலான 'கலிபர்' தாக்கு

யாழ்ப்பாணம், செப்.4

நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஹெலி ஒன்று நல்லூர், முத்திரைச்சந்தி திருநெல்வேலி, கொக்குவில், ஆறுகால் மடம் பகுதிகளில் பரவலாக 'கலிபர்' தாக்குதலை நடத்தியது.

ஒருநாள் இடைவெளியின் பின்னர் திடீரென இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதால், வீதிகளில் சென்றவர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடி ஒதுங்கினர்.

திருநெல்வேலி, இராசவீதி, செம்மணிப்பகுதிகளில் தோட்டங்களில் - வயல்களில் - வேலை செய்து கொண்டிருந்தவர்களை நோக்கியும் தாக்குதல் நடத்தப்பட்டது. சேத விவரம் தெரியவரவில்லை.

[ஒ-6-5-69]

காரைநகரில் நேற்று

## படை வெளியேறும் முயற்சி புலிகளால் முறியடிப்பு

காரைநகர், செப். 4

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து நேற்றுக் காலை படையினர் வெளியேறியபோது, விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

அதைத்தொடர்ந்து படையினர், பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர்.

அதன்பின் முகாமிலிருந்து படையினர் அடுத்தடுத்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். [ஒ]

## பிரேமாவுடன் பேசிய பின்னர் ஜா இன்று டில்லி புறப்பாடு

இந்தியத் தூதர் நாகேந்திர நாத் ஜா நேற்று மாலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவுக்கு தமிழ் அகதிகள் செல்வதைத் தடுத்து நிறுத்த, மேலும் அகதி முகாம்களை இந்திய உதவியுடன இலங்கையிலேயே நிறுவுவது பற்றி இப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது என்றும் —

அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிப்பது, சிவிலியன்கள் உயிரிழப்பைக் குறைப்பது ஆகிய விஷயங்களும் பேச்சுக்களில் இடம் பெற்றன என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

புதுடில்லியில் இந்திய அரசு அதிகாரிகளுடன் இந்த விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக இந்தியத் தூதர் திரு. ஜா இன்று (செவ்வாய்) புதுடில்லி பயணமாகிறார். (உ-எ)

## 3 தமிழ் மாவட்டங்களில் ஊரடங்கு நீக்கப்பட்டுவிட்டது

### ஆனால் முல்லைத்தீவில் தொடரும்

கொழும்பு, செப்.4

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நான்கு தமிழ் மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும்இன்று காலை 6 மணிக்கு ஊரடங்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

நான்கு மாவட்டங்களிலும் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஊரடங்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. [ஒ-எ]

## புல்மோட்டையில் 25 முஸ்லிம்கள் கைது

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் கடந்த ஞாயிறன்று தொழுகைக்குச் சென்ற 25 முஸ்லிம்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக அறியவந்தது.

இவர்கள் ஏன் கைதுசெய்யப்பட்டார்கள்? கைதானவர்கள் எங்கு கொண்டுசெல்லப்பட்டார்கள்? — என்ற விவரம் தெரியவில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

கொக்குவில் மேற்கு கேணியடி ஒழுங்கையில் ஒரு பொலித்தீன் பையுடன் ஒரு தொகை சில்லறைக்காசு 28 ஆம் திகதி அதிகாலை இ. தயாநிதி என்பவரினால் கண்டு எடுத்து பிடாரிகோவில் உபதபால் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதற்கு உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

(13936)

### இராவணன் கோட்டை

மாயாஜால மந்திரதந்திர வீரதிரச் செயல்கள் நிறைந்த சிறுவர் நவீனம் 20/- ரூபா துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், லக்கி புத்தகசாலை பண்டத்தரிப்பு, திருக்கணித. சிவம் புத்தகசாலைகள் சாவகச்சேரி, ஸ்ரீ காந் புத்தக சாலை நல்லூர்.

(14133)

# கட்டாக்காலி மாடுகளினால் பரந்தனில் பயிர்கள் அழிவு

பரந்தன், செப் 4

சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது பரந்தனில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பலர் தமது பழைய இடங்களுக்குத் திரும்புவதற்கு இன்னும் தயங்குகிறார்கள்.

அவர்களினால் கைவிட்டுச் செல்லப்பட்ட கால்நடைகள் தற்போது அப்பகுதியில் நெற்செய்கைகளை அழிக்கின்றன.

வயல் நிலங்களுக்குள் செல்லும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க பரந்தன் பகுதி சிற்றூர் அவையினர் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

படையினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகளே மக்கள் மீண்டும் பரந்தன் திரும்பத் தயங்குவதற்கும் காரணம் என்று கூறப்படுகிறது.

[இ - 6]

## துண்டியில் தொழிற்சாலை சேதம்

கொழும்புத்துறை, செப். 4

அண்மையில் கொழும்புத் துறைக் கடற்பகுதியில் இருந்து ஏவப்பட்ட பீரங்கி ஷெல் தாக்குதலில் துண்டியிலுள்ள புற்பாய்த் தொழிற்சாலை ஒன்று பலத்த சேதமடைந்தது.

தொழிற்சாலையில் இருந்த இயந்திரங்கள், உபசரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன சேதமுற்றன.

[ஓ-30]

## ப. நோ. கூ. ச. களுக்கு பொருள் அனுப்ப முடியாத நிலை

ஊர்காவற்றுறை, வேலணை புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கங்களுக்கு உணவுப்பொருள்களை அனுப்ப முடியாத நிலை உருவாகி இருக்கிறது.

உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. லிங்கநாதன் இதனைத் தெரிவித்தார்.

உணவுப்பொருள்கள் உண்டு. ஆனால் அனுப்ப வழியில்லை. காரைநகர், அராலிப் பாதைகள் ஊடாக போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியுள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-3)

## தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம்

கொழும்புத்துறை, செப். 4

தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசாங்கம் நடத்தி வரும் இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரியும், தமிழ் அகதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் ஐந்து லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்துப் பெறும் பணியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும், துரையப்பா வித்தியாலயத்திலும் ஆரம்பித்து வைத்தது.

5 லட்சம் கையெழுத்துக்களுடான மகஜர் ஐநா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் மூலமாக ஐக்கிய நாடுகள் சபைக்கும், சார்க்நாட்டு தூதுவராலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

(இ-30)

## புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் மெழுகுதிரியில் சிகிச்சை!

யாழ்ப்பாணம், செப். 4

பொம்மர் தாக்குதல்களினாலும், ஹெலி வேட்டுக்களினாலும் காயமடைந்தவர்களுக்கு மெழுகுதிரிவெளிச்சத்தில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையிலேயே இந்த அவல நிலைமை.

ஊர்காவற்றுறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல்களால் காயமடைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு புங்குடுதீவு ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வைத்திய சாலையில் சிகிச்சை வசதிகள் மிகமிகக் குறைவு. எனினும் இக்கரைக்குக் கொண்டுவர முடியாத கஷ்டத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, நாரந்தனை ஆகிய பகுதிகளில் இருந்து காயமுற்றோர் புங்குடுதீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். தீவகத்தில் அந்த வைத்தியசாலை மட்டுமே இயங்குகிறது.

விளக்கு எரிப்பதற்கு மண்ணெண்ணையும் இல்லாத நிலையில் இரவு நேரத்தில் மெழுகுதிரி வெளிச்சத்திலேயே கடமைபுரிந்து, டாக்டர்களும் தாதிகளும் நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கின்றனர்.

சின்னமூளாயில் உள்ள தனியார் கூட்டுறவு வைத்தியசாலையும் மூடப்பட்டுள்ளது.

(அ-3-5)

## உபதிஸ்ஸ கமநாயக்காவின் வீடு சுவீகரிப்பு

கொழும்பு, செப். 4

உபதிஸ்ஸ கமநாயக்காவின் வீட்டையும் அதனுடனான காணியையும் அரசு சுவீகரித்துக் கொண்டு விட்டது.

உபதிஸ்ஸ கமநாயக்கா ஜே. வி. பியின் பொதுச் செயலாளராக இருந்ததும் — கடந்த ஆண்டு தென்பகுதியில் அரசு படை நடத்திய தாக்குதலின் போது அவர் கொல்லப்பட்டதும் தெரிந்தவையே.

(இ-எ)

### மேலே பொம்மர்; கீழே பாம்பு!

## இருதலைக்கொள்ளி எறும்பாக முல்லைத்தீவுப் பகுதி மக்கள்!

முல்லைத்தீவு, செப் 4

இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் முல்லைத்தீவு மக்கள் இருந்து வருகின்றனர். மேலே பொம்மர்கள். பொம்மர்களுக்கு அஞ்சி பதுங்குகுழிகளை நாடினால் பதுங்கு குழிகளுக்குள் பாம்பு.

பொம்மர்கள் வந்ததும் பதுங்கு குழிகளுக்குள் ஓடும் மக்கள் சில சமயம் ஓடிய வேகத்திலேயே திரும்பி விடுகின்றனராம். உள்ளே பாம்புகள் குடி கொள்வதே இதற்கு காரணம் ஆகும்.

இங்கு பாம்புக்கடிக்கு சிகிச்சை செய்வதற்கு உரிய எதுவும் கையிருப்பில் இல்லை என்றும் கூறப்படுகிறது.

(இ - 3 - 6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்லையா ஜெயசிங்கம்

மலர்வு: 10 - 08 - 1939

உதிர்வு: 06 - 08 - 1990

அன்பான அப்பா! பொறுமையின் பொக்கிஷமாய் என்றும் சிரித்த முகத்துடன் எங்களை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து ஆளாக்கிய எமது இதயத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி அகால மரணம் எய்திய போதிலும் என்றும் உம் வழியையே பின்பற்றுவோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்.

சிவசக்தி மில்ஸ்,
சூராவத்தை,
சுன்னாகம்.

[சி-5183]

# பேச்சு மூலம் தீர்வுகாண வழங்கிய சந்தர்ப்பத்தை அரசு தவறவிட்டது

## ராய்ட்டருக்கு விடுதலைப்புலிகள் பிரமுகர் பேட்டி

மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு சுரேஷ் சமீபத்தில் தலைமன்னாரில் வைத்து ராய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குப் பேட்டி அளித்தார். இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் மன்னார் ராணுவப் பொறுப்பாளர் லெஷ்மன், அலுவலகப் பொறுப்பாளர், துஷ்யந்தன் ஆகியோரும் கூட இருந்தனர். ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு சுரேஷ் அளித்த பேட்டிகீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாம் கொடுத்த ஒருவருட கால சந்தர்ப்பத்தை இலங்கை அரசு தவறவிட்டது.

நாங்கள் வழங்கிய கடைசி சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டனர். இனியும் நாம் ஏமாறத் தயாரில்லை இதுவே இறுதிச் சண்டை.

தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் இரண்டரை மாதங்களாக நடைபெறுகிறது. பேச்சுவார்த்தை என்ற போர்வையில் இலங்கை அரசு வடக்கு— கிழக்குப் பகுதிகளில் இராணுவ முகாம்களைப் பலப்படுத்து [illegible] ங்களை தமிழ் பகுதிகளில் தொடர்ந்து நடத்துவதிலும் காலம் கடத்தியது. புலிகளுடன் ஒரு யுத்தத்தை நடத்துவதற்காக அந்த ஒருவருட காலத்தில் ஆயத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது.

### நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தை

நிபந்தனையற்ற ஒரு பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் சர்வதேச சமூகம் ஈடுபடுமானால் அதற்கான எமது ஒத்துழைப்பை வழங்குவது குறித்து நாம் ஆலோசிப்போம்.

இத்தகைய ஒரு பேச்சுவார்த்தைக்கு முன் தமிழினம் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். எமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் எந்த விதமான நிர்ப்பந்தங்களோ அழுத்தங்களோ நிபந்தனைகளோ இல்லாத ஒரு பேச்சுவார்த்தைக்கான முயற்சிக்கு எமது ஆதரவு உண்டு.

### ஆத்மீக ஆதரவு

இந்தியாவின் ஆத்மீக ஆதரவையே நாம் எமது பிரச்சினைத் தீர்வில் எதிர்பார்க்கின்றோம். திட்டமிட்ட இன ஒழிப்பு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறுகின்றது. என்ற உண்மையை இந்தியா உணரவேண்டும். இந்த அடிப்படையில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள எமது மக்களை இந்திய மக்கள் ஆதரித்துப் பாதுகாத்து வருவதை நாம் வரவேற்கின்றோம். நாம் அவர்களை நேசிக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக விடுதலைப் புலிகளை அப்போது முன்னைய பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி கருதினார். இப்போது நாம் வடக்கு- கிழக்கு மக்களின் கூடிய ஆதரவைப் பெற்று வலிமையுடையவர்களாக இருக்கின்றோம். துரோகிகள் யார், தியாகிகள் யார் என்பதை மக்களும் இன்று நன்கு உணர்ந்துள்ளார்கள்.

### ஜே. வி. பி பாணியில்

ஆயிரக்கணக்கான சிங்கள அப்பாவி இளைஞர்களைக் கொன்றதன் மூலம் ஜே. வி. பியை அழித்தது போன்ற பாணியையே இன்று அரச படைகள் வடக்கு— கிழக்கில் கையாளுகின்றன. இதன் மூலம் எம்மை அழிக்கலாம் என அரசு கருதுமானால் அது பகற்கனவாகவே முடியும்.

பொய்ப் பிரச்சாரங்களைத் தென்பகுதி மக்களிடையே நடத்துகின்ற அதேவேளையில் தனது சுயலாபத்திற்காகவும, அரபுநாடுகளின் உதவியைப் பெறுவதற்காகவுமே கிழக்குப் பகுதியில் அப்பாவி முஸ்லிம் மக்களை இராணுவத்தினர் கொன்று குவித்து வருகின்றார்கள்.

இந்த கொலைகளுக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு — கிழக்கு பிரதேசங்களில் இருந்து கடைசி ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற்றும் வரை நாம் ஆயுதங்களை கீழே வைக்கமாட்டோம்.

(இ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஜெயவேவா’ கோஷமிடுமாறு இராணுவத்தினர் கட்டாயம்!

மண்டைதீவிலுள்ள இராணுவத்தினர் பொழுது போகாத வேளையில், அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைக் கட்டாயப்படுத்தி ‘‘ஸ்ரீலங்கா வட்ட ஜெயவேவா’’ (ஸ்ரீலங்காவுக்கு வெற்றி வாழ்த்து) எனக் கோஷமிடுமாறு கட்டாயப்படுத்துகின்றனராம்.

அவர்கள் கோஷமிடும்போது சிப்பாய்களும் சேர்ந்து ‘‘ஜெயவேவா’’ எனக் கூச்சலிடுவார்களாம்.

அங்கிருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

உங்களுக்கு ‘‘அரை ஈழம் வேண்டுமா, முழு ஈழம் வேண்டுமா?’’ என்றும் சிப்பாய்கள் அடிக்கடி கொச்சைத் தமிழில் கேட்பார்களாம். (ஒ - 100)

# குருநகர்மீனவர் அவலநிலை

குருநகர், செப். 4

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குருநகர்ப் பகுதி மீனவர்களின் வள்ளங்கள், மற்றும் இயந்திரப் படகுகள் சேதம் அடைந்துள்ளன. அத்துடன் பலரின் வீடுகள் உடைந்ததால் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

பீரங்கிக் கப்பல் தாக்குதலால் கடற்றொழில் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ - 51)

# 3 ஆம் கட்ட நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கு மூன்றாம் கட்டநிவாரணமும் வழங்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளார்.

இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்பட்ட பின்பே நிவாரணப் பெர்மிட்டுகளை வழங்குமாறு உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை

# விண்ணப்ப திகதியை நீடிக்க ஏற்கனவே கோரப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 4

‘ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதியை நீடிக்குமாறு கடந்த 21ஆம் திகதியே கோரிக்கை விடுத்திருந்தோம்’

இப்படிக் கூறுகிறார் வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம்

கடந்த மாதம் 27ஆம் திகதி கல்வி அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. மாவட்டத்தில் நிலைமை வழமைக்கு திரும்பி ஒரு மாதத்துக்கு பின்பே விண்ணப்பம் கோர வேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றிய அன்றே இந்த முடிவு கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

இப்படி கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

ஜீ சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கடைசி நாள் ஆகஸ்ட் 31 ஆகும்.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்ப திகதியை நீடிக்குமாறு வடக்கு — கிழக்கில் இருந்து எவரும் கோரவில்லை என்றும் இன்னும் வடக்கு— கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் காலம் பிந்தினாலும் தொடர்ந்து தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்றும் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெத முல்ல சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் மேற்கண்ட விவரத்தைத் தெரிவித்தார். (இ 3)

# படையினர் மழைக்கு ஒதுங்க பொதுமக்கள் தப்பி ஓட்டம்!

அராலி, செப். 4

மண்டைதீவில் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் சிலர், மழை பெய்தபோது தப்பிச் சென்றனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மண்டைதீவுப் பகுதிக்கு படையினர் முன்னேறிச் சென்றபோது மனித கேடயமாகப் பலரை தம்முடன் அழைத்துச் சென்றது தெரிந்ததே. இரவு நேரம் திடீரென மழை கொட்டத் தொடங்கவே படையினரில் சிலர் அருகிலுள்ள மறைவிடங்களுக்கு ஓட்டம் பிடித்தனர்.

படையினரால் பிடிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டவர்களில் சிலர் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தப்பிச் சென்றனராம்.

இப்படித் தப்பிய ஒருவர் உதயனுக்கு மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். (இ)

## விசேட அபிஷேகம்

யாழ்ப்பாணம், செ. 4

நாட்டில் நிரந்தர அமைதி சமாதானம், சுபீட்சம் வெகு விரைவில் உருவாக இறை அருள் வேண்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் விசேட அபிஷேகம் நடைபெறுகிறது. (இ-எ)

## முல்லைத்தீவில் அரிசி விலை

முல்லைத்தீவு, செப். 4

முல்லைத்தீவுப் பகுதியிலும் தற்போது அரிசி விலை அதிகரிக்கத் தொடங்கி விட்டது.

நெல்லை அறுவடை செய்ய முடியாதிருப்பதும், கையிருப்பில் உள்ள நெல்லை அரிசி ஆலைகளில் குற்ற முடியாதிருப்பதுமே இதற்குக் காரணம் (இ-3-6)

## சீநோர் ஊழியர் சம்பளம்

காரைநகர், குருநகர் சீநோர் தொழிற்சாலைகளின் ஊழியர் சம்பளம் இரண்டு மாதங்களாக வழங்கப்படவில்லை. (இ...)

படைகளை அனுப்பாமல் வேறு வழிகள் மூலம்

# ஈழத்தமிழர் கொலையை நிறுத்த இந்தியா முழு முயற்சி எடுக்கும்

## ‘தூரதர்ஷன்’ பேட்டியில் குஜ்ரால்

புதுடில்லி, செப், 4

இலங்கைக்கு எமது படைகளை அனுப்புவதை தவிர்த்து வேறு வழிகள் மூலம் ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படுவதை தடுக்க இந்திய அரசு தன்னாலான முழு முயற்சிகளையும் எடுக்கும்.

இவ்வாறு கூறினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால்.

‘‘தூரதர்ஷன்’’ நேற்று முன்தினம் இரவு ஒளிபரப்பிய பேட்டி நிகழ்ச்சி ஒன்றில் பங்கு கொண்டு பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்தியாவின் வெளிவிவகார விடயங்கள் மற்றும் கொள்கைகள் சம்பந்தமாக பொதுமக்கள் பலர் எழுப்பிய பல கேள்விகளுக்கு அவர் மாறி. மாறி பதிலளித்தார்.

அப்போது ஈழப்பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பிய ஒருவர், ‘‘இலங்கையிலிருந்து அமைதிப்படையை விலக்கிக் கொண்டதால்தான் இன்று ஈழத்தில் தமிழர் இவ்வாறு படுகொலையாகும் நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே அமைதிப்படையை விலக்கிக் கொள்ளும் விடயத்தில் உங்கள் அரசு காட்டிய அவசரப் போக்கினால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதை ஒப்புக் கொள்கின்றீர்களா? என்று வினாவினார்.

இக்கேள்விக்கு பதிலளிக்கையில் திரு குஜ்ரால் கூறியதாவது:-

‘‘எமது நாட்டுப்படைகளை இன்னொரு நாட்டுக்கு அனுப்புவதன் மூலம் அந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது இயலாத காரியம். அது முறையும் ஆகாது.

எப்படியும் எமது படைகளை நாம் விலக்க வேண்டிய தேவை இருந்தது. அதனைச் சரியாகச் செய்தோம்.

இலங்கையிலிருந்து இந்தியப் படை வெளியேற வேண்டும் என இன்று மோதிக் கொண்டிருக்கும் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருமே எங்களை வற்புறுத்தினார்கள்.

அதன்படி நாம் விலக்கிக் கொண்டோம். இப்போது நாம் விலக்கிக் கொண்டது தான் தவறு என்று சொன்னால் அது எபபடிச் சரியாகும்?

### குண்டு வீச்சு அதிர்ச்சி தருகிறது

ஈழத்தமிழ் மக்கள் படும் இன்னல்களைக் கண்டு நாம் வேதனைப்படுகின்றோம். அவர்களின் துயரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

ஈழத்தமிழர்களையும் அவர்களுக்கு நேசக் கரம் நீட்டி நிற்கும் தமிழக மக்களையும் இந்திய அரசு அனுதாபக் கண்ணோட்டத்துடன் நோக்குகிறது.

பொது மக்கள் பகுதி மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சுகள் இடம் பெறுவது எம்மை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. இதனை வன்மையாகக் கண்டித்து நானும், இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கும் அறிக்கை விட்டிருக்கிறோம்.

இந்த விடயத்தில் இந்திய அரசின் நிலைப்பாடும் உறுதியான முறையில் இலங்கை அரசுக்கு தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது.

### காலம் பிந்தி விடவில்லை

இன்னும் காலம் பிந்திவிடவில்லை. இலங்கை அரசு இந்தக் காலகட்டத்திலாவது அடக்கு முறையைக் கைவிட்டு, இணக்கமான தீர்வு கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டு,

ஆனால் —

இலங்கைக்கு படைகளை அனுப்பாமல் — வேறு வழிகள் மூலம் ஈழத் தமிழருக்கு பாதுகாப்பை ஏற்படுத்த — சகல வழிகளிலும் இந்தியா முயலும் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்— என்றார். (உ)

## செய்திச் சாரம்

### ஜெனரேட்டர் இயக்க மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ் - மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள ஜெனரேட்டர்களை இயக்க சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு 10 பரல் மண்எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில்ஜெனரேட்டர்கள் இருந்தும் மண்எண்ணெய் இல்லாததால் அவற்றை இயக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட மண்எண்ணெயில் 10 பரல்களை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபையிடம் அரச அதிபர் வழங்கி உள்ளார். [இ-3]

### எழுதுமட்டுவாளில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப். 4

எழுதுமட்டுவாளில் வெள்ளி அன்று ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி அகில ஞானச்சந்திரன் [வயது 20] என்பவர் காயமடைந்தார்.

இவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஒ-15]

### பஸ்கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு. செப். 4

தனியார் பஸ்கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என்று தனியார் பஸ் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தனியார் பஸ் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### ஊதியம்

கொழும்புத்துறை, செப். 4

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு சுண்டுக்குளி குயின் சலூன் தொழிலாளர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை வழங்கியுள்ளனர். [இ - 30]

# கிளிநொச்சியிலும் பொருள் விலைகள் திடீர் இறக்கம்

கிளிநொச்சி, செப். 4

கிளிநொச்சியிலும் உணவுப் பொருள்களின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு பொருள்கள் வந்து சேர்ந்ததை அடுத்து அங்கிருந்து லொறிகள்,டிராக்டர்கள் மூலம் கிளிநொச்சிக்கு பொருள்கள் அதிகளவில் எடுத்து வரப்பட்டுள்ளன.

சீனி கிலோ 37 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 35 ரூபாவாகவும், பூடு கிலோ 60 ரூபாவாகவும் லக்ஸ்பிறே 500 கிராம் அங்கர் பால்மா வகைகள் 68 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. [இ - 76]

# 5 தடவைகளுக்கு மேல் தேவாலயம் மீது ஷெல்

குருநகர், செப். 4

குருநகர்ப் பகுதியில் கோட்டை இராணுவத்தினரின் ஷெல்கள் நாளாந்தம் ஏவப்பட்டு வருவதால் ஆலயங்கள், வீடுகள் திரும்பத் திரும்பச்சேதம் அடைந்துவருகின்றன.

குருநகர் புனித யாகப்பர் ஆலயம், புதுமைமாதா தேவாலயம், உத்தரியமாதா கோவில் என்பன பலமுறை தாக்குதலுக்கு உள்ளாகிப் பலத்த சேதம் அடைந்துள்ளன.

யாகப்பர் தேவாலயத்தில் ஐந்து தடவைகளுக்கும் மேலாக தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், பதினொரு ஷெல்கள் இதுவரை கோவிலைத் தாக்கி இருப்பதாகவும் அறியப்படுகிறது. (அ-51)

# நவாலி - மானிப்பாயில் தீவுப் பகுதி அகதிகள்

நவாலி, செப். 4

சமீபத்திய சம்பவங்களை அடுத்து இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களில் நூற்றுக் கணக்கானோர் நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளுக்கும் வந்துள்ளனர்.

ஒருபகுதியினர் அகதிமுகாம்களில் தங்கி உள்ளனர். ஏனையோர் உறவினர்களுடன் தங்கி உள்ளனர்.

யாழ்ப்பாணம், கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் ஏற்கனவே இங்கு தங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொழும்பில் சிக்கிய தமிழர்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் இல்லை

யாழ்ப்பாணம், செப். 4

வடக்கு - கிழக்கில் யுத்தம் மூளுவதற்கு, முன்னர் இப் பகுதிகளில் இருந்து கொழும்பு சென்று சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதவர்கள் இன்னும் அகதிகளாகவே இருக்கிறார்கள். அவர்களை இங்கு அனுப்ப எவ்வித ஏற்பாடும் இல்லை.

சம்பந்தப்பட்டவர்களைச் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் மற்றும் சமூக சமய ஸ்தாபனங்கள் எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

போக்குவரத்தின் போது போதிய பாதுகாப்பு வழங்குவது குறித்து பாதுகாப்புத் துறையிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்காததாலேயே அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க முடியவில்லை என்று அறிய வருகிறது.

கொழும்பில் சிக்குண்டவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், மாணிக்கப்பிள்ளையார்கோவிலிலும் தங்கியுள்ளனர்.

சரஸ்வதி மண்டபத்தில் சுமார் 400 பேரும், மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் சுமார் 300 பேரும் உள்ளார்கள்.

இந்த அகதிகளுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களான சர்வோதயம், சமூகசேவைகள் நிலையம்ஆகியனவே உணவு மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிவருகின்றன.

எனினும் ஒருசிலர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையிலும் அங்கிருந்து பல இன்னல்களுக்கு மத்தியில் தமது சொந்தத்தில் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். (அ-6)

## காரைநகரில் ஷெல் தாக்கி இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், செப்.4

காரைநகர்கடற்படைமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் கருங்காலிப் பகுதியில் இரு வீடுகள்சேதம் அடைந்தன. இருவர் காயம் அடைந்தனர். நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இராசம்மா தம்பிராசா (வயது 26) அன்னலஷ்மி இராசரத்தினம் (வயது 42) ஆகிய பெண்களே காயம் அடைந்தவர்கள் ஆவர். (இ-15)

## பொருளாதாரத் தடைகளை நீக்கக் கோரி மகஜர்கள்

யாழ்ப்பாணம், செப். 4

ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கி உடனடியாக உணவு, மருந்துப் பொருட்களை அனுப்பி வைக்கவேண்டும் என்று கோரும்மகஜர்கள்நேற்றுயாழ் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே.சண்முகநாதனிடம் கையளிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி தலைமையில் யாழ்-ப. நோ. கூ. சங்கம், கல்விக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் சழகங்கள் முதலான 160க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் மகஜர்களைக் கையளித்தன.

மகஜர்களைப் பெற்றுக் கொண்டு பேசிய மேலதிக அரச அதிபர்-

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் அன்னையர் முன்னணியினர் ஊர்வலத்தை முன்வந்து நடத்தி மக்களின் நிலையைப் பிரதிபலித்திருப்பதாகக் கூறி மகஜர்களை உடனடியாக கையளிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். (இ-6-5-143)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை:

## அமைதிப் பிரதேசமாக்க செஞ்சிலுவை சங்கம் முயற்சி

பருத்தித்துறை, செப். 4

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை (மந்திகை) பகுதியை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ் வைத்தியசாலையைச் சுற்றி உள்ள சில வீதிகளை மூடி அவசர தேவைகளுக்கு மாத்திரம் திறந்து விடக்கூடிய ஒழுங்குகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இதேவேளை மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரிவதற்காக புதிய வைத்தியர்கள் குழு இன்று (செவ்வாய்) வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது. குழுவின் இணைப்பதிகாரி ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துள்ளார். (இ-118)

## நேற்றைய கோஷங்கள்

அன்னையர் முன்னணி நேற்று நகரில் நடத்திய ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள் வருமாறு:-

- ★ உணவின்றி மரணம், மருந்தின்றி மரணம்.
- ★ ஒரு நாள் உணவில் ஒரு மாதம் வாழ்வதா?
- ★ பசித்த குழந்தைக்கு பால் மா இல்லை.
- ★ பேசுவது தர்மம், வீசுவது குண்டு,
- ★ கட்டடத்தை தகர்த்து விட்டால் கல்விச் செல்வம் அழிந்து விடுமா?
- ★ சோற்றுக்கு வழியின்றிப் போனாலும் சோரம் போகமாட்டோம்.
- ★ ஊசலாடும் உயிருக்கு ஊசி மருந்து இல்லை.

[ஒ-5-6]

## "அருள் 89" தாக்குதல்

செட்டிகுளம் இராணுவ முகாம் காவல் அரணை நோக்கி கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகள் "அருள் 89" துப்பாக்கி கிரனேட் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும்கிடைக்கவில்லை. [உ]

## போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 4

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கோட்டை முகாம் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் காயமுற்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி பெனா [கிறிஸ்தோபர் கிளிற்றன் நிர்மலன்- மன்னார்- பண்டிவிரிச்சான்] நேற்றுவீரமரணமடைந்தார். [உ]

## பரந்தனில் மற்றும் ஒரு மிதிவெடிவிபத்து

யாழ்ப்பாணம், செப். 4

படையினர் விட்டுச்சென்ற பகுதிகளைத் துப்புரவு செய்யச்சென்ற மற்றும்ஒருவர் மிதிவெடியில் சிக்கினார்.

பரந்தனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம்இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த உருத்திராபதி நகுலேந்திரன்(வயது 20) என்பவரேபடுகாயமடைந்தவராவார். (இ-15)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

அரசுத் திணைக்களங்களுக்கும் மாகாணசபைகளுக்கும் எழுதுவினைஞர்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் தட்டச்சாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. [ஒ-எ]

## சாவகச்சேரியில் குண்டுவீச்சு

சாவகச்சேரிப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இரண்டுநாள் இடைவெளியின்பின்னர் அன்று காலை ஒன்பது மணியளவில் வந்த பொம்மர்கள் கொடிகாமம்-கெருடாவில், மீசாலை, வேம்பிராய் ஆகிய பகுதிகளில் குண்டுகளை வீசின. கூடவேவந்த ஹெலியும் இப்பகுதிகளில் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது. (அ-31)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து இலங்கநாயகம்

(நயினாதீவு பிறப்பு, இறப்புப் பதிவாளரும் தீவுப் பகுதி விவாகப் பதிவாளரும்)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் வசித்தவரும் ஆகிய சரவணமுத்து இலங்கநாயகம் 3-9-90 இல் காலமாகிவிட்டார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலகுமார், ரேணுகா, குலராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 4-9-90 செவ்வாய்க் கிழமை (இன்று) காலை 11. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

465/5, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப் புளியடி,
யாழ்ப்பாணம், (13939)

தகவல்:
ச. சாந்தலிங்கம்

### முத்து திருநாவுக்கரசு

(மேசன்)

(கட்டட ஒப்பந்தக்காரர், ஆர்மோனிய வித்துவான் அரியாலை.)

அரியாலை நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட மு. திருநாவுக்கரசு 3 9 1990 அன்று காலமாகிவிட்டார்.

இவர் புனிதவதியின் அன்புக் கணவரும், நவரத்தினம் (காந்தம்) அவர்களின் அன்புச் சகோதரரும், ஜெயானந்தன் (டென்மார்க்), காலஞ்சென்ற ஜெயாதரன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரவியத்தின் அன்பு மைத்துனரும், நாகராசா, இராசரத்தினம் (அல்வாய்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், சிவானந்தன் (நூலகம் யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (4-9-1990) இன்று நண்பகல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(13940)

தகவல்:
சிவானந்தன்

## வடக்கு.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டங்கள் ஏற்படுவதாக நடத்தவேண்டும் என்றும் தூதுக்குழு கேட்டுக்கொண்டது.

இதனிடையில் —

நேற்றைய சந்திப்பின் போது 17 எதிர்க் கட்சிகளும் கூட்டாக "வானத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்திக்கொள்ளும்படி" கேட்டுக் கொண்டதாக இந்திய மக்கள் தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன.

பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படாதவாறு பாதுகாப்புப் படையினர் தங்கள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுத் (Carpet bombiɔg) தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படாதிருக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொண்டிருப்பதாக ஜனாதிபதி தூதுக்குழுவிற்கு உறுதியளித்தார்.

இதேவேளை —

வடக்கு - கிழக்கிற்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்புவதில் ஏற்படும் முன்னேற்றம், பின்னடைவு என்பன குறித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த குழு ஒன்று வாராந்தம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து நிலைமையைப் பரிசீலனை செய்வது எனவும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. (ஒ-எ)

## முல்லையில்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தனர்என்பதை அரசு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

இதே சமயம்—

முல்லைத்தீவு நகரப் பகுதியில் நேற்று கண்மூடித்தனமாக விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. கடற்பகுதியில் இருந்து அகோர பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமானதாகத்தெரிய வந்தது.

உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய மேலதிக விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

இதனிடையில்—

அளம்பில் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் வீடு ஒன்று முற்றாகச் சேதமுற்றது. அந்த வீட்டிலிருந்த பொதுமக்கள் நால்வர் படுகாயமுற்றனர். (உ)

## அன்னையர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லப்பட்டன. கோஷங்களும் எழுப்பப்பட்டன.

ஊர்வலம் நல்லூர்-கச்சேரி வீதியூடாக யாழ். கச்சேரியை அடைந்தது.

அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. கூட்டத்துக்கு அன்னையர் முன்னணித் தலைவி திருமதி சரஸ்வதி கனகரத்தினம் தலைமை வகித்தார்.

இதனை அடுத்து அன்னையர் முன்னணித் தலைவியால் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதனிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அரச அதிபர் அவ்வேளை சமுகமளித்திருக்காததால் அவர் சார்பாக மேலதிக அரச அதிபர் மகஜரைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார். (இ-5-6-143)

## உணவு---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுக் கொண்டிருந்தது.

கிளிநொச்சிப் பகுதிக்கு மிக அத்தியாவசியமாக இந்தப் பொருள்கள் தேவைப்பட்டதால் அப்பகுதியைக் கடந்து கிளிநொச்சிக்கு செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விரும்பியது. அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் அத்தகைய முயற்சியை பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் எதிர்த்தது. வாகன அணியை திரும்பி வவுனியாவுக்குச் செல்லும்படி பணித்தது.

-இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேலும் தெரிவித்திருக்கிறது.

உணவு லொறிகளை விடுதலைப் புலிகள் திருப்பி அனுப்பியதாக கொழும்புப் பத்திரிகைகளிலேயே செய்திகள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org